consideration of the Committee which the Assembly has constituted to go into the various problems arising in the reorganization of the educational pattern and as soon as their decision is finalised, from next year onwards that will be put into effect..

National Extension Service Blocks

* 165 *Q.*—SRI K. ARANGANATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there was any case in 1954 and 1955 in which the National Extension Scheme Block could not be extended for want of trained people and if so, what steps the Government have taken to train men for the National Extension Service Schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government of India allot National Extension Scheme Blocks each year with reference to the number of trained personnel available. The question raised by the Member does not therefore arise.

SRI K. ARANGANATHAN: The Central Government, I believe, could not allot more blocks because sufficient number of trained personnel was not available. The reply which the Hon. Minister just now gave was the same which he gave some time ago. May I know why the Government have failed to train more personnel to get more National Extension Scheme Blocks allotted to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have already explained that, under the Second Five-Year Plan, the entire area of the State is to be covered under the National Extension Services. There is also a training programme and we are taking every step to train adequate number of village level workers and to make them available to National Extension Schemes.

SRI V. BALAKRISHNAN: What is the peculiarity of training that has led to this scarcity of trained personnel for this work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: We have to select workers who have the aptitude and who are ready to take up the work and they are to be given 18 months' training and they will be available for service only after 18 months' training. That is the difficulty, Sir.

SRI M. PALANIYANDI: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அதிகமான பிளாக்குகள் விஸ்தரிக்கப்பட இருந்தாலும்கூட, இப்பொழுது பல இடங்களிலே அதிகமான பிளாக்குகள் தேவைப்படுகிறது என்று அங்கத்தினர்களும் பொது நல ஸ்தாபனங்களும் கூறியிருக்கிறார்கள். ஆகையால் இதற்குப் போதுமான பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லாத நிலைமையை மாற்றி, சீக்கிரம் அதிகமான பிளாக்குகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் காரியம் ஆக்குவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: போதிய பயிற்சியில்லாத ஊழியர்களை வைத்து இந்தத் திட்டத்தை நடத்தினால் இது சரியான வகையில் நடைபெறாது. போதுமான பயிற்சி வேண்டுமென்று மத்திய அரசாங்கம் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, பயிற்சி

ஸ்தாபனங்களை இன்னும் அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, செய்யப்பட்டும் வருகின்றன, ஷிப்டுகளும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

Sri K. ARANGANATHAN : இரண்டாவது ஐந்து வருஷ திட்டக் காலத்திற்குள் தேசம் பூராவும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை அமுலாக்கவேண்டுமானால், அதற்குத் தேவையான பயிற்சி பெற்ற அதிகாரிகள் கிடைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டனவா ? தேவையான பயிற்சி பெற்ற நபர்கள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிற்குள் ராஜ்யம் பூராவும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குறிய வகையிலே பயிற்சி வேலை கவனிக்கப்பட்டு வருகிறது. போதிய பயிற்சி பெற்ற ஊழியர்கள் கிடைக்கும் வகையிலேதான் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

Sri S. DAIVASIGAMONEY : Obviously the lack of trained personnel to man the various posts under the National Extension Service Schemes is due to absence of attractive terms of appointment. Will the Hon. Minister see that at least in the future the terms of appointment are made more lucrative and attractive?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think the terms should be improved and can be improved. But the difficulty is that they have to undergo an 18 months' training. But, still I can assure the hon. Members once again that the Government are taking necessary steps to secure adequate number of trained personnel for completing the programme before the end of the Second Five-Year Plan.

Sri R. KRISHNASWAMY NAIDU : சில வருஷங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்ட பிளாக்குகளிலே கிராம சேவக்குகள் தேவைக்கு அதிகமாக இருப்பதாக அனுபவபூர்வமாக சொல்லப்படுகிறது. அப்படி தேவைக்கு அதிகமான கிராம சேவக்குகளை தேவையுள்ள இடங்களிலே வேலைக்கு அமர்த்துவதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தினிடம் இருக்கும் தகவல்களை பொறுத்த மட்டில், எந்த இடத்திலும் தேவைக்கு அதிகமான கிராம சேவக்குகள் நியமிக்கப்படவில்லை.

Sri S. RAMALINGAM : பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்கள் கிடைக்கின்றார்களோ அதற்குத் தகுந்த மாதிரி பிளாக்குகள் அமைப்பதாக கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். இது குல்லாய்க்குத் தகுந்த தலை ஏற்படுத்துவது மாதிரி இருக்கிறதே தவிர தலைக்குத் தகுந்த குல்லாயாக இல்லை. பயிற்சிபெற்ற ஊழியர்கள் எத்தனைபேர்கள் தேவை என்பதை நிர்ணயித்து அவ்வளவு பேர்களுக்குப் பயிற்சி கொடுத்து அதற்குத் தகுந்த மாதிரி பிளாக்குகளை ஏற்படுத்தவேண்டும். இரண்டாவது ஐந்து வருஷ திட்டக் காலத்திற்குள் மாகாணம் பூராவும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை அமுலாக்குவதற்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் எவ்வளவு பேர்கள் தேவை என்பதையாவது அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறதா ? அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி சரிவர புரிந்துகொள்ளவில்லை என்று நான் நம்புகிறேன். சர்க்கார்

[22nd September 1956

இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் ராஜ்யம் பூராவும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எத்தனை பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை என்பதை கணக்குப் போட்டுத்தான் இருக்கிறார்கள். இப்பொழுது வருஷத்திற்கு 840 பயிற்சி பெற்ற ஊழியர்கள் கிடைப்பதற்கான ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதிலே தவறு ஒன்றுமில்லை.

Sri C. KANDASAMY : பயிற்சி பெற்ற ஊழியர்களில் சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. ஆகையால் எல்லா பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கும் வேலை கிடைக்கும் அளவுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் தகுந்த பயிற்சி பெற்றவர்கள் யாரும் வேலைக்கு இடமில்லை என்ற காரணத்திற்காக நீக்கப்படவில்லை. அவர்களுடைய தகுதியைக் கவனித்துத்தான் அவர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு 'ஸ்டைபெண்டு' கொடுக்கப்படுகிறது. 18 மாத பயிற்சி முடிந்தபின் அவர்கள் ஆங்காங்கு 'போஸ்டு' செய்யப் பட்டுத்தான் வருகிறார்கள்.

Sri K. ARANGANATHAN : தேசிய வளர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு என்ஜினியர்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். என்ஜினியர்கள் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் வேலையில் அதிகமான முன்னேற்றம் காணமுடியவில்லை. அவர்களுக்கு தேசீய விஸ்தரிப்பு மனப்பான்மை இல்லை. ஆகையால் அவர்களுக்கு கிராமத்துக்கு உழைக்கவேண்டுமென்ற மனப்பான்மையை உண்டாக்கத் தகுந்த பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த விஷயமும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது. ஆனால், கிராம அபிவிருத்தித் திட்ட வேலைக்கு வேண்டிய என்ஜினியர்களில் பற்றாக்குறை இருக்கிறது என்பதையும் நான் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 166 *Q.*—Sri P. K. GOPALAKRISHNAN (on behalf of Sri K. P. Gopalan) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that there is an Advisory Committee for the Community Development Block areas in Payyanur and Madayi firkas in the Chirakkal taluk, North Malabar; and

(*b*) if so, the number of times the Committee met after the conversion of the National Extension Service Blocks in the above areas into Community Development Blocks?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Once.

Sri P. K. GOPALAKRISHNAN : May I know, what are the recommendations made by the Advisory Committee and how far the Government have implemented them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have notice.